


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மே 09, 2019 | புரட்சி 18 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00


# சென்னையில் களப் போராளி பத்ரியின் 15ஆவது நினைவு நாள்

# உணர்வலைகளை உருவாக்கிய ‘வெளிச்சம் பெறாத தொண்டர்கள்’ விழா






கழகப் போராளி பத்ரி நாராயணன் 15ஆவது நினைவு நாள் ஏப்.30, 2019 அன்று சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ‘வெளிச்சத்துக்கு வராத தொண்டர்கள்’ விழாவாக நடத்தப்பட்டது.

சென்னை இராயப்பேட்டைப் பகுதியை பெரியார் இயக்கத்தின் கோட்டையாக மாற்றிய களப் போராளி பத்ரி நாராயணன், சமூக விரோத சக்திகளால் 2004, ஏப். 30 அன்று பட்டப் பகலில் படுகொலைச் செய்யப்பட்டார். ஒரு காலத்தில் அவர் வாழ்ந்த இராயப்பேட்டை வி.எம். தெரு பகுதி, சமூக விரோதிகளின் கூடாரமாக இருந்தது. பல இளைஞர்களை அந்தப் பாதையிலிருந்து விடுவித்து பெரியார் கொள்கைகளை எடுத்துச் சொல்லி பெரியார் கொள்கைப் பாதைக்குத் திரும்பியவர் பத்ரி நாராயணன். அப்பகுதியில் அவரால் உருவாக்கிய 120 இளைஞர்களைக் கொண்டுதான் சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் 1996, ஜூலை 16ஆம் நாள் அண்ணா சாலையில் உள்ள பெரியார் சிலை முன்பு கூடி உறுதியேற்றுத் தொடங்கியது. பார்ப்பன ஆதிக்க எதிர்ப்புடன் இணைந்து பார்ப்பனியத்தில் மூழ்கி நிற்கும் இடைநிலை ஜாதியின் ஜாதி வெறி, தலித் விரோதப் போக்கையும் எதிர்க்க வேண்டிய வரலாற்றுச் சூழலை உணர்ந்து புதிய பண்பு மாற்றத்துடன் பெரியார் திராவிடர் கழகம் நடைபோடத் தொடங்கியது. அதற்கு முன்பு திராவிடர் கழகத்தின் செயல் வீரராகப் பணியாற்றியவர் பத்ரி. அவரது முயற்சியால்தான் பகுதியிலுள்ள அனைத்துக் கட்சியினர் ஆதரவோடு வி.எம். சாலை சந்திப்பில் பெரியார் சிலை திறக்கப் பட்டது. ஏராளமான ஜாதி மறுப்புத் திருமணங்கள் பத்ரியின் முயற்சியால் நடந்தன. அவரால் உருவாக்கப்பட்ட இளைஞர்கள் இன்று தென்சென்னைப் பகுதியில் கழகத்தின் செயல்பாட்டாளர்களாக களமாடி வருகிறார்கள். அடுத்த தலைமுறையைச் சார்ந்த இளைஞர்களும் கழகத்தின் பொறுப்புகளையேற்று துடிப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பத்ரியின் நினைவு நாளை சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் கொள்கை அடையாளத்தோடு நடத்தி வருகிறார்கள். இந்த ஆண்டு வெளிச்சம் பெறாத தொண்டர்கள் விழாவாக நடத்தப்பட்டது.

ஏப். 30 அன்று காலை 9 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனுடன் கழகத் தோழர்கள் பத்ரியின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து உறுதியேற்று வீரவணக்கம் செலுத்தினர். தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள் கட்சிகளைச் சார்ந்த பத்ரியின் தோழர்களும் பத்ரியின் தாயார், துணைவியார், சகோதரிகள், பத்ரியின் மகள் மற்றும் மகன் நிகழ்வில் பங்கேற்றனர்.

மாலை 6 மணியளவில் வி.எம். தெரு சந்திப்பில் “விரட்டுக் கலைப் பண்பாட்டுக் குழு” கலைநிகழ்வுகளுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. வெளிச்சம் பெறாத பெரியார் தொண்டர்கள் பட்டுக்கோட்டை அழகிரி, குத்தூசி குருசாமி, திருவாரூர் தங்கராசு, சுவரெழுத்து சுப்பையா, புலவர் இமயவரம்பன், பாவலர் பாலசுந்தரம், நாகை பாட்சா, டபிள்யூ பி.ஏ. சவுந்தர பாண்டியனார், எஸ். நீலாவதி, குஞ்சிதம் குருசாமி, பண்டிதை ஞானாம்பாள், ஆர். அன்னபூரணி, மஞ்சுளா பாய், இரா. கண்ணம்மாள், இராயப்பேட்டை கண்ணன், இராயப்பேட்டை குமார், பத்ரி நாராயணன் ஆகியோர் தொண்டுகளை நினைவுகூரும் எழுச்சிப் பாடல்கள் நாடகங்களை நடத்திக் காட்டினர். தோழர்களுக்கு மிகுந்த உணர்வுகளையும் உற்சாகத்தையும் ஊட்டிய நிகழ்வாக இது அமைந்தது.

நிகழ்ச்சிக்கு கழகத்தின் களப்பணிகளையே தனது இலட்சியமாகக் கொண்டு தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாத செயல்வீரர் கோ. வீரமுத்து தலைமைதாங்கினார். மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி தனது வரவேற்புரையில் தோழர் வீரா என்ற வீரமுத்து தொடர்ந்து தன்னை முன்னிலைப்படுத்தாது செய்து வரும் உடல் உழைப்பு நிறைந்த களப்பணிகளை உருக்கத்துடன் எடுத்துக் கூறினார். பெரியார் நினைவு நாள் சுவரொட்டி ஒட்டும் பணியின் போது கழகச் செயல்வீரர்களான தந்தையை இழந்த இளைஞர்கள் கண்ணன், குமார் விபத்தில் இறந்ததையும், ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அந்த இளைஞர்களின் இழப்பை அவரது தாயார்கள் இயக்கத்துக்காக சகித்துக் கொண்ட பெருந்தன்மையையும் தோழர் உமாபதி எடுத்துக் கூறியபோது கூட்டமே கண்ணீர் சிந்தியது.

தொடர்ந்து வடசென்னை மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று களப்பணியாற்றி வரும் பெண் தோழர் இராஜி, கழகத் தோழர்களின் தோழமை உணர்வையும், களப் பணிகளைகளையும் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார். தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர்ஜெகதீசன், பத்ரியின் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்திவிட்டு கழகத்தின் கூட்டத்தில் பங்கேற்றார். பத்ரியின் செயலூக்கத்தையும், பெரியார் தொண்டர்களின் தன்னலமற்ற களப்பணிகளையும் நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்து உரையாற்றினார். தி.மு.க. வழக்கறிஞர் அணியைச் சார்ந்த ஒ.சுந்தரம், தி.மு.க. பகுதிச் செயலாளர் துரை ஆகியோர் உரையைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வெளிச்சம் பெறாத தொண்டர்கள் குறித்து உரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர்மணி, சுயமரியாதை இயக்கத்தின் வீராங்கனைகளாக செயல்பட்ட பெண் தோழர்கள் பற்றி விரிவாகப் பேசினார். நிகழ்ச்சிக்கு காலந்தொட்டு இயக்கப் பணியாற்றி வரும் ஏ. சம்பத், வி. முருகன், பகுதி என்று தோழர்கள் அன்போடு அழைக்கும் ஆ. தமிழ்ச் செல்வன், கருப்புத் தமிழ் ஆகிய மூத்த தோழர்கள் முன்னிலை வகித்தனர். நிகழ்வில் அனைவரும் பாராட்டப் பெற்றனர். கோ. தமிழரசு நன்றி கூறினார்.

கழகக் கட்மைப்பு நிதியாக கழகத் தலைவரிடம் தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், மாவட்டத்தலைவர் ம. வேழ வேந்தன், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி ஆகியோர் வழங்கினர். பகுதி தி.மு.க. செயலாளர் துரை ரூ.10,000 வழங்குவதாக மேடையில் அறிவித்தார். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் உரைகளும் தோழர்களிடையே மிகுந்த எழுச்சியையும் உணர்வுகளையும் உருவாக்கியது.

**– நமது செய்தியாளர்**

## களப்பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன

# இராசிபுரம் கழகம் எடுத்த மணியம்மையார் நூற்றாண்டு — மகளிர் நாள் விழா

*இராசிபுரம் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், அன்னை மணியம்மையார் நூற்றாண்டு விழா – மகளிர் தினவிழா – சிறந்த பெண் சேவையாளர்கள், சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா என முப்பெரும் விழா இராசிபுரம் கன்னட சைனீகர் திருமண மண்டபத்தில் 21.4.2019 ஞாயிறு மாலை 5.45 மணியளவில் தொடங்கியது*

சுமதி மதிவதனி (தி.வி.க. இராசிபுரம்) தலைமை தாங்கினார். மணிமேகலை (தி.வி.க. ஈரோடு) வரவேற்புரை யாற்றினார். வி.பாலு (தி.மு.க.முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்), கழகத் தலைவர் கொளத்தூர்மணி, முனைவர் சுந்தரவள்ளி (த.மு.எ.க.ச.) நிகழ்வில் சிறப்புரையாற்றினர்.

1) மதவாத சக்திகளுக்கு எதிராகவும், சமூக நீதி காக்கவும் துணிச்சலாக களமாடி வருகிற முனைவர் சுந்தரவள்ளி அவர்களுக்கு ‘மக்கள் அரசியல்’ விருதினையும்,

2) கரூர்மாவட்டம் பள்ளப்பட்டியைச் சார்ந்த பெரியார் பற்றாளரும் இந்தியாவின் தலைசிறந்த 100 இயற்கை வேளாண்மை விவசாயிகளில் ஒருவராக டெல்லியில் தனியார் ஊடகம் ஒன்றால் தேர்ந்தெடுக்கப் பட்டவரும், காடுகளை அழித்தொழித்த ஈஷா யோகா அமைப்பினர் அழைக்கும் பாராட்டு விழாவை முற்றிலும் புறக்கணித்து வருகிற கு. சரோஜா அவர்களுக்கு ‘இயற்கை வேளாண்மை’ விருதும்,

3) சேலம் (ஏற்காடு மலை அடிவாரத்தில்) பெண்களுக்கான காப்பகத்தை ‘தாய் அன்பு இல்லம்’ என்ற பெயரில் நடத்தும் த கா. சுமதி அவர்களுக்கு ‘மனிதநேயர்’ விருதும்,

4) சேலம் 5 ரோடு பகுதியில் பெண்களுக்கான தையலகத்தை அமைத்து பல பெண் தையற் கலைஞர்களை உருவாக்கி அவர்கள் தனியாக கடை தொடங்குகிற அளவுக்கு உதவிகள் செய்து வருவதோடு சேலம் - குரங்கு சாவடி பகுதியில் தனது வீட்டு மாடியில் மாடித் தோட்டம் அமைத்து எண்ணற்றப் பெண்களுக்கு அதை கற்றுத் தருவதோடு, அருகிலுள்ள விவசாய நிலத்தில் இயற்கை வேளாண்மை முறையில் காய்கறிகள், கீரைகளைப் பயிரிட்டு மக்கள் ஆரோக்கியமான முறையில் உண்டு வாழவும், மண்ணை மலட்டுத் தன்மைக்கு உள்ளாக்காமலும் பலருக்கும் இயற்கை வேளாண்மை முறையை கற்றுத் தந்து வருகிற கா. கா. அல்லி (ஆரண்யா ஆர்கானிக்) அவர்களுக்கு ‘இயற்கை வேளாண்மை’ விருதும்,

5) சேலத்தில் சாலைகளிலும், வீதி தோறும் ஆதரவற்ற நிலையில், மன வளர்ச்சி குன்றிய நிலையில் சுற்றித் திரிகிறவர்களுக்கு தினமும் 200 நபர்களுக்கும், ஞாயிற்றுக்கிழமை 500 நபர்களுக்கும் என மதிய வேளை உணவு அளித்து வருகிற, மிகவும் மனநலம் குன்றியவர்களுக்கு உடைகளை மாற்றி விடுவதோடு,



முடிகளையும் மழித்து உதவி செய்து வருகிற சேலம் அமுதசுரபி அறக்கட்டளை குழுவுக்கு ‘மனிதநேயர் விருதும்’

6) பெண்களுக்கான இலவச தையல் பயிற்சி மூலம் 300-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு கார்மெண்ட்ஸில் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தந்ததோடு சுய தொழில் தொடங்கவும் உதவி வரும் இராசிபுரம் ஜேசிஐ மெட்ரோவின் பட்டயத் தலைவரான ச. சசி ரேகா அவர்களுக்கு ‘மகளிர் வளர்ப்புத் திறன்’ விருதும்

7) பெண்கள், குழந்தைகள் நலனே சமூக ஆரோக்கியமாக மாறும் என நம்பிக்கைக் கொண்டு பெண்களிடத்தில் விழிப்புணர்வு இயக்கம் நடத்தி வரும் ஓமியோபதி மருத்துவர் கோ. பிரேமா BHMS அவர்களுக்கு ‘மாற்று மருத்துவம்’ விருதும்,

8) 8 வருடங்களுக்கு மேலாக லைப் டிரஸ்ட் என்ற அமைப்பு வழியாக சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற வரும் ஆதரவற்றோருக்குப் பல வகையிலும் உதவி வரும் சேலம் செ. கலைவாணி அவர்களுக்கு ‘மனிதநேயர்’ விருதும்,

9) நாமக்கல்-நகராட்சி சேந்தமங்கலம் சாலையில் உள்ள மின்மயானத்தில் 6 வருடங்களுக்கும் மேலாக பிணங்களை எரிக்கக் கூடிய பணிகளை துணிச்சலாக செய்து வருகிற மோ. கலாராணி, பா. மலர்க்கொடி இருவருக்கும் ‘செயல்துணிவு’ விருதும்,

10) ஆசிய அளவிலான பளுதூக்கும் போட்டிகளில் பங்கேற்று சாதனைகள் புரிந்து வரும் நாமக்கல் அ. கதீஜாபேகம் அவர்களுக்கு ‘உடல்வலு சாதனை’ விருதும்,

11) ஆசிய பளுதூக்கும் போட்டியில் முதல் இடத்தையும், தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற உலக அளவிலான பளுதூக்கும் போட்டியில் தனிநபர் பிரிவுகளில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கமும் வென்ற கா. கமலி, நாமக்கல் அவர்களுக்கு ‘உடல்வலு சாதனை’ விருதும்,

12) ஹிமாச்சல் பிரதேசம், கோவை, பஞ்சாப்பில் நடைபெற்ற தேசிய அளவிலான பளுதூக்கும் போட்டிகளில் இரண்டாம் இடம் பெற்றவரும், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற மாநில அளவிலான பளு தூக்கும் மற்றும் பளுதூக்கும் போட்டிகளில் முதல் இடம் பெற்றவருமான கு. பாரதி, சேலம் அவர்களுக்கு ‘உடல்வலு சாதனை’ விருதும்,

13) ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டதால் பெற்றோர்களின் ஆதரவை இழந்த நிலையில் கணவர் இயற்கை ஆர்வலர் என்பதால் தமது கணவரோடு இணைந்து பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்து வரும் வி. சாருபிரபா, வெண்ணந்தூர் அவர்களுக்கு ‘இயற்கைப் பேணல் ஆர்வலர்’ விருதும்,

14) கஜா புயலால் பாதித்த பகுதிகளுக்கு 15 பெண்களுடன் இணைந்து தாம் சார்ந்த மகளிர் குழுவின் உதவியுடன் உள்ளூரில் பொதுமக்கள் மூலமாக சேகரித்த ரூ. 50,000 மதிப்பிலான நிவாரணப் பொருள்களை தந்து உதவிய ம. அனிதா, ஹ. திவ்யா (இராசிபுரம்) இருவருக்கும் ‘மனிதநேயர்’ விருதும் வழங்கப்பட்டன.

கழக நிகழ்வுகளுக்கு தொடர்ந்து பேருதவி அளித்து வருவதோடு, இந்த நிகழ்வும் சிறக்க 13,000 ரூபாய் நிதி அளித்த தோழர் வி.பாலு (தி.மு.க. முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்) அவர்களுக்கு கழகப் பெண் தோழர்கள் சார்பில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது

மேலும் நிகழ்வில் இரவு உணவு செலவுக்காக ரூ 10,000 நிதி அளித்த சிவக்குமார் (நாமக்கல்) அவர்களுக்கும், 2003 இல் இராசிபுரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் மேடையில் அமைக்கப்பட்டிருந்த பேனரில் சாட் பேப்பரில் வரையப்பட்டிருந்த பெரியாரின் படத்தைப் பார்த்து அதை வரைந்தவருக்கு தனது பாராட்டைக் கூறுங்கள் என கழகத் தலைவர் கொளத்தூர் மணி பாராட்டுக்குரிய உருவப்படத்தை தோழர் பட்டணம் மதி துணையுடன் டெக்கரேசன் பணியை குறைந்த செலவில் அருமையாக வடிவமைத்துக் கொடுத்த. இராசிபுரம் (கெட்டிமேளம்) டெக்கரேசன் உரிமையாளர் சேகர் அவர்களுக்கும் கழகத் தலைவர் நினைவுப் பரிசு வழங்கினார்.

நிகழ்வில் ஆயில்பட்டியைச் சேர்ந்த நந்தினி என்ற பெண் இராசிபுரம் தி.வி.க. சார்பில் ஏற்காடு தோழர் பெருமாள் பிரபாகரன் துணையுடன் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஏற்காட்டில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டதைத் தொடர்ந்து, தலைவரின் களப்பணியை, எளிமையை நேரடியாகவே அறிந்தமையால் அவர் மீது பற்றுக் கொண்ட காரணத்தால் தலைவரின் உருவப் படத்தையும் சுந்தரவள்ளி உருவப் படத்தையும் அழகாக வரைந்து எடுத்து வந்து அதை மேடையிலேயே இருவருக்கும் வழங்கி மகிழ்ந்தார். முத்துலட்சுமி (தி.வி.க. திருப்பூர்) நன்றி கூறினார்.

# ஆசிரியர் சிவகாமி—முகில்ராசு இணையரின் இல்லத் திறப்பு—மத மறுப்பு மண விழா





தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில்ராசு இணையரின் மகன் சி.இரா. கதிர்முகிலன் - அ.நஜ்முன்னிசா ஆகியோரின் காதல், மத மறுப்பு மணவிழா 24.4.2019 காலை 11 மணியளவில் சிறப்புடன் நிகழ்ந்தது. அதே நாளில் சிவகாமி-முகில்ராசு இணையரின் புதிய இல்லத் திறப்பு விழாவும் சிறப்புடன் நடந்தது.

நிமிர்வு கலையகத்தின் பறை இசையோடு தொடங்கியது இல்லத் திறப்பு. இல்லத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். மணமக்களுக்கு பேராசிரியர் சரசுவதி உறுதிமொழி கூறி மணவிழாவை நடத்தி வைத்தார். இல்லத் திறப்பு நிகழ்வுக்கு கழகப் பொருளாளர் சு. துரைசாமி தலைமை தாங்கினார். அவர் தமது உரையில் ஆசிரியர் சிவசாமியும் தோழர் முகில்ராசுவும் கழகத்துக்கு முழு நேரக் களப்பணியாளர்களாக தொண்டாற்றுவதையும் கழகத் தோழர்களுக்கு நெருக்கடி வந்தால், ஓடோடிச் சென்று உதவி வருவதையும் திருப்பூர் மாவட்டத்தில் கழகத் தோழர்களை ஒருங்கிணைத்து களப்பணியாற்றுவதில் முனைப்பும் ஆர்வமும் காட்டி செயல்படுவதையும் பெருமையுடன் நினைவு கூர்ந்தார். கழகத் தலைவர், பொதுச் செயலாளர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்டச் செயலாளர் நீதிராசன் வரவேற்புரையாற்றினார். நிகழ்வில், பெரியார், மணியம்மையார், அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் படங்களைத் தோழர்கள் மணிமொழி, முத்துலட்சுமி, கோமதி, பேராசிரியர் சரசுவதி திறந்து வைத்தனர். தமிழகம் முழுதும் கழகத் தோழர்கள் ஏராளமாக நிகழ்ச்சிக்கு திரண்டு வந்திருந்தனர். அனைவருக்கும் புலால் விருந்து வழங்கப்பட்டது.

## கழகத்தில் இணைந்தனர்

ஆசிரியர் சிவகாமி - முகில்ராசு இல்லத் திறப்பு - இல்ல மணவிழா நிகழ்வுகளின் போது காரத் தொழுவு சிவானந்தம், கடத்தூர் கணக்கன், ருத்ராபாளையம் இராசேந்திரன் ஆகியோர் கழகத் தலைவர் பொதுச் செயலாளர் முன்னிலையில் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தனர். கழக சார்பில் அவர்களுக்கு கழகத் தலைவர், பொதுச் செயலாளர் ஆடை போர்த்தினர். தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் உடனிருந்தார்.

# தமிழ் இலக்கியம் குறித்த பெரியார் பார்வை தவறா?

*பாவலர் தமிழேந்தி தொகுத்த 'திராவிடம், பெரியாரியம் இன்றும் தேவையே' நூலில் பெரியாரும் தமிழும்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' அவர் நினைவாகப் பதிவு செய்கிறது.*

பெரியாரின் முன்னோர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள், கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆனால் பின்னாளில் அவர்கள் தமிழ்நாட்டிற்குக் குடிபெயர்ந்து பல ஆண்டுகளாய் இங்கு வாழ்ந்து தம் தாய்மொழியாகத் தமிழ் மொழியை ஏற்றுக் கொண்டவர்கள். இது பற்றிப் பெரியாரே பின்வருமாறு கூறுவார்:

"என்னுடைய தாய்மொழி கன்னடமாக இருந்த போதிலும் அதை நான் தினசரி பேச்சு வழக்கில் கொண்டிருக்கவில்லை. எல்லாவற்றிற்கும் தமிழ் மொழியைத்தான் பயன்படுத்தி வருகின்றேன். எனக்குக் கன்னடத்தைவிடத் தெலுங்கில் கொஞ்சம் பயிற்சி உண்டு. எப்படி என்றால், வியாபார முறையிலும் நண்பர்களின் பழக்கத்தாலுமேயாகும். இருந்தாலும் தமிழ்மொழியால்தான் என்னுடைய கருத்துகள் அனைத்தையும் நான் நினைக்கிற மாதிரி வெளிப்படுத்த முடியும்." (விடுதலை 21.5.1959)

"மேலும், எனக்கு மொழிப் பற்று, இனப்பற்று, கடவுள் பற்று, நாட்டுப் பற்று, மதப் பற்று போன்ற வேறு எந்தப் பற்றும் இல்லை. மனிதப் பற்று ஒன்றுதான் உண்டு. அதுவும் வளர்ச்சி நோக்கிய மனிதப் பற்று, எனக்கு வளர்ச்சியே முக்கியம். எனக்கு வேறு எந்த அபிமானமும் கிடையாது." (15.10.1962 விடுதலை - தலையங்கம்) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியெல்லாம் பெரியார் பல இடங்களில் பேசி இருந்தாலும் ஆதிக்கம் எந்த வடிவில் எந்தத் திசையிலிருந்து வந்தாலும் அதனை எதிர்க்கும் முதல் போராளியாய் அவர் களத்தில் நின்றுள்ளார். அவரின் இந்தி எதிர்ப்பு, சமற்கிருத ஆதிக்க எதிர்ப்புப் போராட்டச் சுவடுகளை யாராலும் எளிதில் அழித்துவிட முடியாது. திருக்குறளைத் தமிழ் மக்களிடையே முன்னெடுத்துச் சென்றதிலும், தமிழ் நாடெங்கும் தமிழிசை இயக்கத்தை வளர்த் தெடுத்ததிலும் பெரியாரின் பங்கு மிகப் பெரிதாகும்.

இந்த உண்மைகளையெல்லாம் மறுத்தும் மறைத்தும் இன்று தம்மைத் தீவிரத் தமிழ்த் தேசியர்களாய்க் காட்டிக் கொள்ள முயலும் சிலர் பெரியாரைக் கன்னடர் என்று பழித்தும் காஞ்சி சங்கராச்சாரியுடன் ஒப்பிட்டும் பகை கக்குகிறார்கள். பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று தரந்தாழ்த்தி விட்டார் என்று அங்கலாய்க்கிறார்கள்.

எவரும் தமிழிலக்கிய வரலாற்றை நேர்மையான முறையில் அணுக வேண்டும். அப்போதுதான் தமிழிலக்கியங்கள் மீது பெரியார் கொண்ட சினத்திற்கான காரணம் புரியும். தமிழில் இன்றுள்ள மிக மூத்த இலக்கியம் மற்றும் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இது சங்க இலக்ககியங் களுக்கெல்லாம் முற்பட்டது. அந்தத் தொல்காப்பியத்திலேயே நால்வருணக் கருத்தியல் கால் கொண்டுவிட்டது. அரசர்களால் போற்றப்படும் அறிவாளர்களாக ஆரியப் பார்ப்பனர்கள் வளர்ச்சிப் பெற்று விட்டார்கள். அறுவகைத் தொழில் புரியும் பார்ப்பனரை வழிபட்டு அதனால் பெருமை அடையும் தமிழ் அரசர் பலர் தோன்றிவிட்டார்கள் என்பதைத் தொல்காப்பியத்தின் வழி அறிய இயலும்.

சேர மன்னர்களைப் புகழ்ந்து பாடும் பதிற்றுப் பத்து நூலில், "மறைஓதல், வேட்டல், அவை இரண்டையும் பிறர் செய்யச் செய்தல், வேள்வியை இயற்றல், வறியார்க்கு ஒன்றை ஈதல், தமக்கு ஒருவர் கொடுத்ததை ஏற்றல் என்ற ஆறு தொழில்களைச் செய்து ஒழுகும் அறநூல் பயனை விரும்பும் அந்தணர்களை வழிபட்டு அதனால் உலகம் நின்னை வழிபட வாழி!" என ஒரு புலவர் சேரனை வாழ்த்துகிறார்.

*"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல் ஏற்றல்*
*ஈதல் வேட்டல் என்று ஆறு புரிந்தொழுகும்*
*அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி"*
*(பதிற்றுப்பத்து 24:6-8)*

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்கிற இருதமிழ் மன்னர்களைப் பற்றிப் புறநானூறு பேசுவதும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

தொல்காப்பியத்தில் அந்தணர்க்கு உரியவாய்ச் சுட்டப்படும் பொருள்களைத் தாங்கிய பார்ப்பனர்கள் பற்றிய குறிப்புகளும் எட்டுத் தொகை

## பாவலர் தமிழேந்தி



நூல்களில் ஒன்றாகிய கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது.

'பெருமா அந்தணரே! உறியில் பொருந்திய கமண்டலத்தையும், அரி, அயன், அரன் என்னும் மூவரும் ஒருவர் என்று சொல்லும் சொல்லை உடைய முக்கோலையும் தக்கபடி தோளில் சுமந்து வருபவரே!

*"எறிதரு கதிர்தாங்கி ஏந்திய குடைநிழல்*
*உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்*
*நெறிப்படச் சுவல் அசைஇ வேறொரா நெஞ்சத்துக்*
*குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை*
*அந்தணீர்" (கலித்தொகை, பாடல் 9)*

பிறவி வேற்றுமைப் பாராட்டும் இருபிறப்புக் கோட்பாடும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்று விட்டதைப் பரிபாடல் எடுத்து மொழிகிறது.

'பூணூல் அணிவதற்கு முன்னம் ஒரு பிறவியும், பின்னம் ஒரு பிறவியும் ஆன இரு பிறவிகளையும் உடைய அந்தணர் அறத்தைப் பொருந்தியவனே' எனச் செவ்வேள் முருகன் புலவர் கேசவனாரால் புகழப்படுகிறான்.

*"இருபிறப்பு இருபெயர் ஈர நெஞ்சத்து*
*ஒருபெயர் அந்தணர் அறன் அமர்ந்தோயே"*
*(பரிபாடல் 14:27-28)*

*"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்*
*ஐவகை மரபின் அரசர் பக்கமும்*
*இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்"*

என்பது தொல்காப்பியப் புறத்திணை இயல் சூத்திரம்.

இச்சூத்திரத்திற்குத் தமிழறிஞர் சாமி. சிதம்பரனார் பின்வருமாறு பொருள் கூறுவார்.

"அறுவகையான தொழில்களையுடைய பார்ப்பனப் பகுதி; ஐந்து வகையான தொழில்களை யுடைய அரசர் பகுதி; ஆறு வகைத் தொழில்கள் உடைய வணிகர் வேளாளர் பகுதி என்பது" அச்சூத்திரத்தில் காணப்படுகிறது.

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவை அந்தணர்க்குரிய அறுவகைத் தொழில்.

ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டம் என்பவை அரசர்க்குரிய ஐவகைத் தொழில்.

ஓதல், வேட்டல், ஈதல், உழுதல், நிரை காத்தல், வாணிகம், இவ்வாறும் வணிகர் தொழில்.

ஓதல், ஈதல், உழவு, நிரைகாத்தல், வணிகம், ஏனையோர்க்கு உதவுவதல் இவை வேளாளரின் ஆறு தொழில்.

இப்பிரிவுகளே தமிழகத்தில் தோன்றியிருந்த நால்வகைப் பிரிவுகள். இதனை இன்னும் தெளிவாகத் தொல்காப்பிய மரபியலில் காணலாம்." (நூல்: சாமி சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், பக்கம் 93)

அவர் கூற்றுப்படியே தொல்காப்பியத்தின் மரபியல் பகுதியில் ஒவ்வொரு பிரிவார்க்கும் உரிய பொருள்கள் இன்னின்ன என்று தனியே சுட்டப் படுகின்றன. அதன்படி அந்தணர்க்கு முப்புரிநூல், கரகம் (தண்ணீர் செம்பு), முக்கோல், ஆசனம் இவைகள் உரியனவாம்.

*"நூலே கரகம் முக்கோல் மணையே*
*ஆயுங் காலை அந்தணர்க் குரிய"*
*(தொல்காப்பியம், மரபியல் - 71:615)*

இவையும் இவைபோலும் நூற்பாக்கள் பிறவும் தொல்காப்பியத்தில் நிகழ்ந்த இடைச் செருகல்கள் என்று சில தமிழறிஞர்கள் கருத்துரைக்கின்றனர்.

தொடக்கத்தில் மக்களிடையே உயர்வு தாழ்வுக்கு இடமில்லாமல் இருந்தது. ஆனால் நாளடைவில் இந்தப் போக்கு மாறிவிட்டது. சாதி வேற்றுமை வந்துவிட்டது. பிறப்பிலே வேற்றுமை உண்டு என்ற நிலையும் ஏற்பட்டு விட்டது. சங்க இலக்கியங் களிலேயே பார்ப்பனர்களைப் போற்றும் பண்பாடு முளைவிடத் தொடங்கிவிட்டது.

பிற தமிழர்கள் பார்ப்பனர்களைத் தொழ வேண்டும் என்பதை அகத்துறை நூலாகிய ஐங்குறு நூறு பேசுகிறது.

*"அறம்புரி அருமறை நவின்ற நாவின்*
*திறம்புரி கொள்கை அந்தணிர் தொழுவல்"*
*(ஐங்குறுநூறு - 387)*

சேர மன்னர்களின் பெருமை பேசும் புற இலக்கியமாகிய பதிற்றுப்பத்து நூலில் பார்ப்பனரைப் பணிந்து அவர்கள் சொற்படி நடப்பதுதான் உயர்ந்த பண்பாகச் சொல்லப்படுகிறது.

*"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே"*
*(பதிற்றுப் பத்து)*

பொருள் வேண்டி இரந்து நின்ற பார்ப்பனர்க்கு அவர்கள் கை நிறையும்படிப் பொன்னும் பொற்காசும் நீர்வார்த்துத் தரவேண்டும் என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று கட்டளை இடுகிறது.

*"ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்*
*பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து"*
*(புறநானூறு 367)*

இந்துக் கடவுள் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. முருகன்தான் தமிழ்க் கடவுள் என்று நம்மவர்கள் சாற்றுவார்கள். முருகன் என்றாலே அழகு என்றும் அவர்கள் மொழிவார்கள். ஆனால்,

*"அறுமுகத்து ஆறு இருதோளால் வென்றி*
*நறுமலர் வள்ளிப்பூ நயந்தோயே"*
*(பரிபாடல், 21, 22)*

என்ற இதே பாடலில் ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் கொண்ட ஆரியக் கற்பனையான முருகக் கடவுள் காட்சி அளிக்கிறார்.

ஆலம் எனும் நஞ்சுண்ட சிவன் (புறம் 240), கவுரவர்களின் அரக்கு மாளிகை அழித்த மகாபாரத வீமன் (கலித் தொகை 25), தலையில் குடுமி வைத்த பார்ப்பான் (ஐங்குறுநூறு 202), சாபத்தால் தேய்ந்தும் வளர்ந்தும் காட்சி தரும் சந்திரன் (பரிபாடல் 159-163) எனப் பலவாறாய்த் தமிழ் மண்ணோடு ஒட்டாத பஞ்சாங்கப் பொய்க் கதைகள் சங்க இலக்கியங்களில் எண்ணற்ற இடங்களில் காணப்படுகின்றன.

பசுவையும் பார்ப்பனரையும் புனிதப் பொருள்களாகப் போற்ற வேண்டும் என்பது ஆரியம் உரைக்கும் அறங்களுக்கெல்லாம் தலையாய அறமாகும். இந்த அறத்தை நம் சங்ககாலத் தமிழ் மன்னர்களும் தலைமேல் வைத்துக் கொண்டாடியுள்ளனர்.

*"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்*
*பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்*
*தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்*
*பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்*
*எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்"*

என அந்த அரசன் பசுவையும் பார்ப்பனரையும் காத்தலுக்கு முன்னுரிமை தருகிறான். இதே கருத்திலதான் சங்க இலக்கியங்களுக்குப் பின் தோன்றிய சிலப்பதிகாரத்திலும் கண்ணகி மதுரையை எரிக்கும்போது அங்கே காக்கப்பட வேண்டிய வற்றுள் முதன்மையான இரண்டு உயிர்களாகப் பார்ப்பனரையும் பசுவையும் மறவாமல் குறிப்பிடுகிறாள்.

*"பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்*
*மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய"*
*(சிலம்பு - அழற்படுகாதை 53-55)*

**(அடுத்த இதழில் முடியும்)**


**'புரட்சிப் பெரியார் முழக்கம்' வங்கிக் கணக்கு**
**'PURATCHI PERIYAR MUZHAKAM'**
கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை, 'கரண்ட்' அக்கவுண்ட்
(Karur Vysya Bank, Adyar Branch, Current Account)
எண் : 1257115000002041
IFSC : KVBL0001257
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896
மேற்கண்ட கணக்கில் கட்டமைப்பு நிதியை செலுத்தலாம்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நன்கொடை திரட்டும் இயக்கத்தைத் தொடங்கி விட்டீர்களா?

கழகத் தோழர்களே!

தலைமைக் கழகத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் கட்டமைப்பு நிதி திரட்டும் களப் பணியை தொடங்கி விட்டீர்களா?

அதற்கான துண்டறிக்கை - நன்கொடை ரசீதுகள் - தோழர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கழகப் பொறுப்பாளர்கள், தோழர்களைச் சந்திக்க வருகிறார்கள்.

தோழர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நிர்ணயிக்கப் பட்டுள்ள இந்த ரூ.20,000/- நன்கொடை திரட்டும் இயக்கத்தில் தோழர்கள் ஆர்வம் காட்டி வருவது நமக்கு நல்ல நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது. அறிவித்த சில நாட்களிலே சில தோழர்கள் ரூ.20,000/- நன்கொடையை வழங்கியிருப்பதையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம். கடந்த இதழ்த் தொடர்ச்சி:

| | |
|---|---|
| கோவை சுரேஷ் பாபு | - ரூ. 20,000 |
| குவைத் பாண்டியன் | - ரூ. 20,000 |
| ‘இட்லி’ தயாரிப்பாளர் இனியவன் | - ரூ. 20,000 |
| சென்னை தோழர்கள் : உதயசங்கர், கார்த்திகேயன், டாக்டர் சுந்தர், கோவை தங்கவேலு, அரிகிருஷ்ணன் இணைந்து | - ரூ. 20,000 |

(பட்டியல் பெருகட்டும்)

## மே 25, 27இல் மேட்டூர் – திருப்பூரில் கழக தோழர்கள் கட்டமைப்பு நிதி வழங்குகிறார்கள்

கழகத் தோழர்கள், களப்பணி யாளர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்ச நன்கொடை ரூ.20000/- என்று கழகம் அறிவித்தத் திட்டத்தைத் தோழர்கள் உற்சாகத்துடன் செயல்படுத்தி வருகிறார்கள்.

கழகத் தலைமைக் கழகத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான இந்த நிதி திரட்டும் இயக்கத்தின் முதல் கட்டமாக மேட்டூர், திருப்பூரில் நிதி வழங்கும் நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

மே 25ஆம் தேதி காலை 11 மணியளவில் மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட கழகங்கள் சார்பில் கழகத் தலைவர், பொதுச் செயலாளரிடம் நிதி வழங்கப்படுகிறது.

மே 27 அன்று திருப்பூரில் ஈரோடு, திருப்பூர், கோவை, பொள்ளாச்சி மாவட்டக் கழகத் தோழர்கள் முதல்கட்ட நிதியை கழகத் தலைவரிடம் வழங்குகிறார்கள்.

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்கிறார்கள்.

## மூத்த பெரியாரியலாளர் ஆனைமுத்து துணைவியார் முடிவெய்தினார்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து வாழ்க்கைத் துணைவியார் சுசீலா அம்மையார் (83), ஏப். 30 அன்று முடிவெய்தினார். திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் சென்னை தாம்பரம் இரும்புலியூரில் உள்ள அவரின் வீட்டில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, கரு. அண்ணாமலை, திருப்பூர் விஜயகுமார், மேட்டூர் முத்து ராஜா உள்ளிட்ட தோழர்கள் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர்.

திருமதி சுசீலா அம்மையாரின் உடல் இராமச்சந்திரா மருத்துவமனைக்கு உடற்கொடையாக அளிக்கப்பட்டது.

## கள்ளக்குறிச்சியில் அம்பேத்கர் சிலைக்கு மாலை

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் ஏப்ரல் 14 அன்று காலை 10.00 மணிக்கு அம்பேத்கர் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. மாவட்ட துணைச் செயலாளர் மு. நாகராஜ், பெரியார் பிரபு, பெரியார் துளசிராஜா, பெரியார் பாரதிதாசன் (த.மா.கழகம்), நீதிபதி செ.வே. ராஜேஷ் (சங்கை, ஒன்றிய செயலாளர்), ஜெ.க. வேலாயுதம், கல்லை ஆசைத் தம்பி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# பாவலர் தமிழேந்தி விடைபெற்றுக் கொண்டார்



சீரிய பெரியாரியலாளரும் கவிஞருமான தமிழேந்தி (69) அரக்கோணத்தில் உள்ள அவரது இல்லத்தில் மே 5ஆம் தேதி காலை 7 மணியளவில் முடிவெய்தினார். தோழர் ஆனைமுத்து அவர்களின் மார்க்சிய-பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் முன்னணி அமைப்பான புரட்சிக் கவிஞர் கலை இலக்கியப் பேரவையின் செயலாளராகப் பணியாற்றி வந்த தோழர் தமிழேந்தி பெரியார் இயக்கங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு செயல்பட்டவர். குறிப்பாக திராவிடர் விடுதலைக் கழகத்துடன் மிகவும் நெருக்கம் கொண்டு கழக நிகழ்வுகள் மாநாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்றும் பேசியும் வந்தவர். சிந்தனையாளன் இதழ் தயாரிப்புப் பணியிலும் அதன் பொங்கல் ஆண்டு மலர் தயாரிப்பிலும் முக்கியப் பொறுப்பேற்று செயல்பட்டு வந்தார். சமகால அரசியலை மரபுக் கவிதை வடிவத்தில் கவிப் புனையும் ஆற்றல் அவரது தனித்துவமான சிறப்பு.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புழல் சிறை வளாகம் முன்பு 7 தமிழர் விடுதலையை வலியுறுத்தும் பொதுக் கூட்டத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தபோது உணர்ச்சி மேலிட்டு மயங்கி விழுந்தார். உடனடியாக புழலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்குக் கொண்டுச் செல்லப்பட்ட போது மூளை நரம்பு பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டது. பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு பேச்சுத் திறன் இழந்து, போரூர் இராமச் சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு சிகிச்சைப் பெற்று ஓளரவு நலன் பெற்றார். ஆனாலும், பெரியார் இயக்கப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லையே என்ற வருத்தமும் கவலையும் அவருக்கு இருந்தது.

பாவேந்தன் என்ற மகனும், அருவி, கனிமொழி என்ற மகளும் இருக்கிறார்கள். மூவருக்கும் ஜாதி மறுப்புத் திருமணத்தையே நடத்தினார். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தாலும் தலித் இயக்கங்களோடு இணைந்து ஜாதி ஒழிப்புக் களமாடியவர். பல்வேறு தலித் அமைப்புகளின் நம்பிக்கையைப் பெற்றவர்.

அவரது உடல் அவரது விருப்பப்படி வேலூர் மருத்துவமனைக்கு மே 5 அன்று மாலை எவ்வித சடங்குகளும் இன்றி ஒப்படைக்கப்பட்டது. அரக்கோணம் சுவால்பேட்டை இராஜாஜி வீதியில் உள்ள அவரது இல்லத்தின் வாயிலில் நடந்த இரங்கல் கூட்டத்தில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியின் செயல் தோழர்கள் வாலாஜா வல்லவன், முகிலன் மற்றும் சுப. வீரபாண்டியன், வே. மதிமாறன், வன்னியரசு (விடுதலை சிறுத்தைகள்), பெ. மணியரசன் (தமிழ்த் தேச பேரியக்கம்), பொதட்டூர் புவியரசன் உள்ளிட்ட பலரும் இரங்கல் உரையாற்றினர். கழக சார்பில் செயலவை உறுப்பினர் நெமிலி திலீபன், மலர் வளையம் வைத்து இரங்கல் உரையாற்றினார். கழகத்தின் சார்பாக ஆசிரியர் பார்த்திபன், பிரியா, அன்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இயக்கங்கள், குறிப்பாக தலித் அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

வேலூர் மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் கவுதமன் பேசும்போது விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முதல் அமைப்புக் கூட்டமே தோழர் தமிழேந்தியின் இல்ல மாடியில் நிகழ்ந்ததையும் தலித் அமைப்புகளின் கூட்டங்களுக்கு அவரது இல்லத்தின் கதவுகள் எப்போதுமே திறந்திருக்கும் என்பதையும் உணர்ச்சிப்பூர்வமாக நினைவு கூர்ந்தார்.

கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் தீவிர வாசகர் தோழர் தமிழேந்தி. கழகச் செயல்பாடுகளையும், கழக ஏட்டில் வெளிவரும் கட்டுரைகளையும் அவ்வப்போது பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் உரையாடுவார். உடல்நலிவுற்ற காலத்திலும்கூட தொடர்ந்து அலைபேசி வழியாகப் பாராட்டி உற்சாகப்படுத்துவார். இறப்பதற்கு மூன்று நாட்கள் முன்பு கூட பொதுச் செயலாளரிடம் தொடர்பு கொண்டு ‘நிமிர்வோம்’ வெளியிட்ட தேர்தல் சிறப்பிதழை பேச முடியாத நிலையிலும் பெரிதும் சிரமப்பட்டுப் பேசிப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இறப்பு மனிதருக்கு இயற்கையானது என்றாலும் சொல்லையும் செயலையும் இணைத்து வாழ்ந்து காட்டிய பெரியாரியவாதியின் இழப்பு சமூகத்துக்கு பேரிழப்பே ஆகும். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ தனது உறுதியான வாசகர் ஒருவரை இழந்து தவிக்கிறது. திராவிடர் விடுதலைக் கழக சார்பில் தோழர் தமிழேந்திக்கு வீர வணக்கம்.

(குறிப்பு: தமிழேந்தி தொகுத்த ‘திராவிடம், பெரியாரியம் இன்றும் தேவையே’ நூலிலிருந்து அவர் எழுதிய ‘பெரியாரும் தமிழும்’ கட்டுரையை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இந்த இதழில் 3ஆம் பக்கத்தில் தோழர் தமிழேந்தி நினைவாக பதிவு செய்திருக்கிறது.)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th May 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN